# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

**முதலாந் தவணைப் பரீட்சை - 2023**

| தரம் - 11 | விவசாயம் | நேரம் :- 3.00மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ........................................................................

## பகுதி – I

01. “நிலத்தில் விழும் ஒரு துளி நீரையேனும் வீணாக கடலில் சேர இடமளிப்பேன்” என்ற கூற்றுக்கு பொருத்தமான மன்னன்?

1) தாதுசேனன் 2) பராக்கிரபாகு 3) மகாசேனன் 4) வசபன்

02. “ஒரு குளத்தில் வெளியேறும் மேலதிக நீர் அதற்கு அடுத்துள்ள குளத்தை போசிக்கக் கூடிய வகையில் அமைக்கப்படும் முறைமை எவ்வாறு அழைக்கப்படும்?

1) கால்வாய் முறைமை 2) அணைக்கட்டு முறைமை
3) விழுதொடர் முறைமை 4) கலிங்கற்தொட்டி முறைமை

03. “சேற்றைக் கழுவிய விவசாயி நாடாளவும் உகந்தவர்” என தனது நூலில் கூறிய ஆங்கிலேயர் யார்?

1) தோமஸ் மெயிற்லன்ட் 2) பிரட்டிக் நோர்த்
3) எட்வேட் பாண்ஸ் 4) றொபட் நொக்ஸ்

04. மழை வீழ்ச்சி அளவிடும் அலகு எது?

1) cm 2) km 3) mm 4) km/h

05. இலங்கையில் நீண்ட பகற்காலம் மற்றும் குறுகிய பகற்காலம் என்பன நிலவும் காலப்பகுதி முறை பின்வருவனவற்றுள் எது?

1) டிசம்பர் 21,ஜுன் 21 2) மே 21,ஆகஸ்ட் 21
3) ஜுன் 21,டிசம்பர் 21 4) ஜனவரி 21,ஏப்பிரல் 21

06. இலங்கை எத்தனை விவசாய சூழலியல் வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது?

1) 42 2) 46 3) 48 4) 40

07. களிமண் துணிக்கையின் விட்டம் சர்வதேச மண்ணியல் சங்கத்தின் வகைப்படுத்தலுக்கு அமைய பின்வருவனவற்றுள் எது?

1) 2mm 2) 2mm-0.2mm
3) 0.2mm-0.02mm 4) 0.002mm

08. மண்ணின் படையடுக்குகளில் சேதனப்பதார்த்தப் படை எவ்வாறு அழைக்கப்படும்?

1) c 2) b 3) o 4) a

09. மண் பக்கப்பார்வையொன்றில் அதிகளவு மண் நுண்ணங்கிகளை கொண்ட வலயங்கள் / படைகள் எவை?

1) O,A. 2) A,B 3) B,C 4) C,R

10. குமிழம் மூலம் இனம்பெருக்கும் தாவரம்?

1) உருளைக்கிழங்கு 2) வெங்காயம் 3) கற்றாளை. 4) அன்னாசி

11. நடுநிலை மண்ணின் pH பெறுமானத்தை குறிப்பது

1) 4.5 இற்கு குறைந்தவை
2) 4.5-6.5 வரை
3) 6.6-7.2 வரை
4) 8.4இற்கு மேல்

12. மண்ணின் அமிலத்தன்மையை நீக்கமேற்கொள்ளக்கூடியசெயற்பாடுஅல்லாதது

1) கல்சியம் காபனேற்று சேர்த்தல்
2) டொலமைற்று சேர்த்தல்
3) அமிலத்தன்மையான பசளைகளைத் தொடர்ச்சியாக இடுவதைத் தவிர்த்தல்
4) சேதனப்பொருட்கள் சிதைவடைவதால் உருவாகும் சேதனஅமிலம் சேர்த்தல்

13. நீர்ப்பாசனத்தில் வினைத்திறன் அதிகமான நீர்ப்பாசனமுறையைக்குறிப்பது

1) தூவல் பாசனம்
2) நிரல் பாசனம்
3) மோதிர வடிவ முறைப்பாசனம்
4) பாத்திப் பாசனம்

14. ஓடிகளின் மூலம் இனம்பெருக்கக் கூடிய தாவரங்களுக்கு உதாரணங்களானவை

1) உருளைக்கிழங்கு மற்றும் சின்னவெங்காயம்
2) வல்லாரை மற்றும் ஸ்ரோபெரி
3) கங்குன் மற்றும் வத்தாளை
4) பொன்னாங்காணி மற்றும் முளைக்கீரை

15. தாய்த்தாவரத்தை ஒத்த இயல்புடைய அதிகளவான தாவரங்களை உற்பத்தி செய்யக் கூடிய இனப்பெருக்க முறை

1) தண்டுத் துண்டங்களை நடுதல்
2) பதிவைத்தல்
3) ஒட்டுதல்
4) இழையவளர்ப்பு

16. ஒரு சாய்வான நிலத்தில் அதிகவேகத்தில் வழிந்தோடும் மழை நீரினால் மண்துணிக்கைகள் காவப்படுவதனை இழிவாக்கும் மிகச்சறந்த வழி

1) மண்ணிற்கு சேதனப் பொருட்கள் இடல்
2) சமவுயரக் கோட்டு கற்களாலான கட்டை உருவாக்குதல்
3) மண்ணிற்கு மூடுபடையிடல்.
4) களைகளை வேருடன் பிடுங்குதல்

17. நாற்றுமேடையிலிருந்து வயலுக்கு நடுகை செய்வதற்காக மரக்கறி நாற்றுக்களை பெறும் போது நாற்றுக்களின் வேர்களில் எவ்விதமான பாதிப்பையும் ஏற்படுத்தாத நாற்றுமேடையின் வகை எது?

1) மணல் நாற்றுமேடை
2) நெரிடோக்கா நாற்றுமேடை
3) தாழ்பாத்தி நாற்றுமேடை
4) உயர் பாத்தி நாற்றுமேடை

18. பசுமைப் புரட்சி காரணமாக இலங்கையில் ஏற்பட்ட மாற்றமானது

1) கூட்டமாக வேலைகளை மேற்கொண்டமையால் விவசாயிகளிடையே ஒற்றுமை வலுப்பெற்றமை
2) விவசாயம் சார்ந்த கிராமிய கலைகள் மூலமாக கலாசாரப் போசிப்பு ஏற்பட்டமை
3) பயிர்களுக்குச் சேதனப் பசளை இடுவதற்கு விவசாயிகளுக்கு ஊக்கம் ஏற்பட்டமை
4) விருத்தி செய்யப்பட்ட பயிர்ப்பேதங்களைச் செய்கை பண்ணியமையால் விளைச்சலில் அதிகரிப்பு ஏற்பட்டமை

19. மண்ணீர் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் பிழையானது எது?

1) மண் பெருந்துளை வெளிகளின் ஊடாக வடிந்து செல்வது புவியீர்ப்பு நீராகும்.
2) மண் நுண்துளை வெளிகளில் மயிர்துளை நீர் காணப்படும்
3) பருகுநீர் தாவரங்களால் இலகுவாக அகத்துறிஞ்ச கூடியதாகும்
4) வயற்கொள்ளவு நிலையை அடைந்த மண்ணில் மயிர்துளை நீரும் பருகுநீரும் மட்டும் காணப்படும்

20. மண்ணின் கற்றயன் மாற்றீட்டுக் கொள்ளளவு அதிகரிப்பதில் பங்களிப்பு செய்யும் மண் கூறுகள்


1) அடையலும் களியும் 2) களியும் உக்கலும்
3) அடையலும் மென்மணலும் 4) அடையலும் உக்கலும்

21. குவியல் முறையில் கூட்டெருவைத் தாயரிக்கும்போது சேதனப் பதார்த்தங்கள் சிதைவடையும் செயன்முறையை அதிகரிக்க உதவும் செயற்பாடக அமைவது

1) காற்றோட்டம் உட்செல்லாதவாறு சேதனப்பார்த்தக் குவியலை நன்கு மூடிவைத்தல்
2) மாதந்தம் குவியலின் மறைப்பை அகற்றி நீர் தெளித்து குவியலைப் புரட்டுதல்
3) நாள்தோறும் குவியலின் மறைப்பை அகற்றி நீர் தெளித்தல்
4) சேதனப் பதார்தமாக அதிகளவு வைக்கோலை இடுதல்

22. உருவில் காட்டப்பட்டுள்ள நோய் முக்கோணிக்கு அமைவாக பயிர்ச்செய்கையின் போது நோயக்கிகளுக்குப் பாதகமான சூழல் நிலைமைகளை ஏற்படுத்தி தாவர நோய்களைக் கட்டுபடுத்தலாம்.இந்த உபாய முறைக்கான உதாரணமாக அமைவது.

1) மண் தொற்று நீக்கல்
2) எதிர்ப்பினப் பயிர்களைப் பயிரிடல்
3) நோயுற்ற தாவரப் பகுதிகளை எரித்தல்
4) பயிர்களுக்கிடையிலான இடைவெளியை அதிகரித்தல்




23. நெற் தாவரத்தில் பூ அரும்பியது தொடக்கம் நெற்கதிர்கள் முதிர்ச்சியடையும் வரை எடுக்கும் நாட்களின் எண்ணிக்கை

1) 30 2) 40 3) 50 4) 60

24. இலங்கையில் தென்மேல் பருவமழை கிடைக்கும் காலப்பகுதி.

1) மே – செப்ரெம்பர் 2) மார்ச் - ஏப்ரல்
3) நவம்பர் - பெப்ரவரி 4) ஒக்ரோபர் - நவம்பர்

25. குக்கர் பிற்றேசியே குடும்பப் பணிரிகளைக் கொண்ட தொகுதி எது?

1) நெல், சோளம் 2) புடோல், பாகல் 3) பயிற்றை, பயறு 4) கோவா, சலாது

26. துணைப்பண்படுத்தல் செயற்பாடாக அமைவது.

1) மண் பாளத்தை வெட்டுதல் 2) மண்ணை இளக்குதல்
3) மண்ணைத் தூர்வையாக்கல் 4) களைகளை அகற்றுதல்

27. இழையவளர்ப்பில் இனப்பெருக்கம் செய்யும் தாவரம் எது?

1) அந்தூரியம் 2) மா 3) பலா 4) தென்னை

28. தரை கீழ்வித்து முளைத்தலைக் கொண்ட இருவித்திலை வித்து.

1) சோயா அவரை 2) கடலை 3) பயறு 4) போஞ்சி

29. மண்ணின்றிய பயர்ச்செய்கையில் திண்ம ஊடகமாகப் பயன்படுத்தக்கூடிய சேதனப் பதார்த்தம்.

1) கன்னார் 2) பெருமணல் 3) கற்றூள் 4) தென்னந்தும்பு

30. குளத்தில் இருந்து மேலதிக நீரை அகற்றப்பயன்படுவது.

1) மதகு 2) கலிங்கற்றொட்டி 3) கலிங்கல் 4) நீர்முறிப்புகல்

31. அதிக நீரை தேக்கி வைக்கும் தன்மை கொண்ட மண். கட்டமைப்பு எது?

1) தணிமணி உரு 2) சிறுமணிஉரு 3) நிமலுரு 4) உபகோணஉரு

32. பின்வருவனவற்றுள் ஆக்கிரமிப்பு களை எது?

1) சீதேவியார் செங்களுநீர் 2) மும்மூட்டுகோரை

3) ஆனை ஆறுகு 4) பாதீனியம்

33. வித்துமுளைத்து புதிய தாவரம் ஒன்றை உருவாக்கத்தக்க ஆற்றலை எவ்வாறு அழைக்கப்படும்.

1) இனப்பெருக்கம் 2) வித்துவாழ்தகவு

3) தரைக்கீழ் வித்துமுளைத்தல் 4) தரைமேல் வித்து முளைத்தல்

34. செயற்கைப் பதிய முறை அமைப்பை காட்டப்படுவது?

1) ஓடி 2) இழையமைப்பு 3) குமிழ் 4) உறிஞ்சி

35. பசுமை இல்லத்தினுள் கட்டுப்படுத்தப்படும் காரணிகள் எவை?

1) வெப்பநிலை, சாரீரப்பதன், ஒளி, வளி

2) வெப்பநிலை, காற்று, சாரீரப்பதன், ஒளி

3) சாரீரப்பதன், ஒளி, வளி, மழைவீழ்ச்சி

4) சாரீரப்பதன், காற்று, ஒளி, மழைவீழ்ச்சி

36. சுழற்றி முறை பயிர்ச் செய்கையில் ஒன்றை அவரை பயிர்ச்செய்வதன் காரணம்.

1) அதிகலாபம் 2) வளிமண்டலகநதரசனைப்பதிததல்

3) அதிக புரதம் 4) நோய்களை அழைத்தல்

37. பாறைகள் சிதைவடைவதால் கிடைக்கும் பல்வேறு பருமனைக் கொண்ட திண்மக்கூறு.

1) மண் இழையமைப்பு 2) மண்கட்டமைப்பு

3) மண்திண்மப் பதார்த்தம் 4) மண்கனிப்பொருள்

38. விவசாயிகளின் தோழன் என அழைக்கப்படும் மண்வாழ் அங்கி.

1) மண்புழு 2) கறையான் 3) உழுவான் 4) கொரவணவன்

39. இலங்கையின் மத்திய நெல் இனவிருத்தி ஆராட்சி நிலையம் அமைந்துள்ள இடம்.

1) தலவாகொல்ல 2) அகலவத்தை 3) பத்தலகொட 4) லபுதுவ

40. பின்வருவனவற்றுள் மேட்டுநில களை அல்லாதது.

1) ஜப்பானிய ஐக்கோணியா 2) தொட்டா சுருங்கி

3) கீழ்காய் நெல்லி 4) சீதேவியார் செங்கழுநீர்

## பகுதி – II

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களிற்கு விடை தருக**

*(01)* *01.* குளத்தின் பிரதான பாகங்கள் வரைந்து குறிக்குக?

*02.* பண்டையகாலத்தில் இலங்கையில் விவசாயம் நிலவியமைக்கான சான்றுகள் *2* தருக?

*03.* பல்நோக்கு அபிவிருத்தித் திட்டங்கள் *4* தருக?

*04.* பல்நோக்கு அபிவிருத்தித் திட்டங்களின் நோக்கங்கள் *4* தருக?

*05.* இலங்கை அபிவிருத்தியில் விவசாயத்தின் வகிபாகம் *2* தருக?

*06.* விவசாயத்தின் இரு பிரிவுகளையும் குறிப்பிடுக?

*07.* பசுமைப் புரட்சியால் விவசாயத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் *2* தருக?

*08.* பிரித்தானியர்களால் இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்ட. பெருந்தோட்டப்பயிர்கள் எவை?

*09.* இலங்கையின் தற்போதைய விவசாயத்துறை *4* தருக?

*10.* வீட்டு வளவில் நாட்டக் கூடிய பயிர்கள் *4* தருக?

*(10 × 2= 20* புள்ளிகள்*)*

*(02)* *01.* உணவுக் காப்பு என்றால் என்ன?

*02.* உணவுக் காப்பில் செல்வாக்குச்செலுத்தும் விடையங்கள் மூன்று தருக?

*03.* எமது நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியில் பங்களிப்புச் செய்யும் துறைகள் எவை?

*04.* தாவர ஒட்டுதல் என்றால் என்ன?

*05.* ஒட்டுதலின் போது ஒட்டுகட்டையில் காணப்பட வேண்டிய இயல்புகள் இரண்டு குறிப்பிடுக?

*06.* பதிய முறை இனப்பெருக்கத்தின் இயல்புகள் இரண்டு குறிப்பிடுக?

*(03)* *01.* வானிலை என்றால் என்ன?

*02.* பயிர்ச்செய்கையில் முக்கியத்துவம் பெறும் வானிலைக் காரணிகளும் அவற்றை அளக்கும் உபகரணங்களும் அட்டவணைப்படுத்துக?

*03.* பயிர்ச்செய்கையில் மண்ணின் பங்களிப்பு மூன்று தருக?

*04.* பயிர் செய்கையில் மண்ணின் முக்கியத்துவங்கள் மூன்று தருக?

*05.* மண் சேதனப்பொருட்களின் முக்கியத்துவம்?

*(04)* *01.* இயற்கைப் பதியக்கட்டமைப்புக்கள் இரண்டைப் பெயரிட்டு அவை ஒவ்வொன்றுக்கும் உதாரணம் ஒவ்வொன்றைக் குறிப்பிடுக?

*02.* வித்து உறங்கு நிலை என்றால் என்ன?

*03.* வித்துகள் மூலம் தாவரங்கள் இனப்பெருக்கம் செய்வதிலுள்ள இரு பிரதிகூலங்களைக் குறிப்பிடுக?

*04.* இழைய வளர்ப்பு மூலம் தாவரங்களை இனப்பெருக்குவதன் அனுகூலங்கள் இரண்டு தருக?

*05.* தண்டுத்துண்டங்களை நாட்டும் போது வேர்விடலை தூண்டுவதற்கு பயன்படுத்தப்படும் ஒமோன் வகைகள் இரண்டைக் குறிப்பிடுக

(06) 01. நிலத்தைப்பண்படுத்தும் நோக்கங்கள் நான்கு தருக?

02. முதற் பண்படுத்தல் உபகரணங்கள் மூன்று தருக?

03. இடைப்பண்டுத்தல் என்றால் என்ன?

04. நாற்றுமேடைக்கான இடத்தினைத் தெரிவுசெய்யும் போது கவனிக்க வேண்டிய அம்சங்கள் நான்கு தருக?

05. துளிமுறை நீர்ப்பாசனத்தின் அனுகூலங்கள் மூன்று தருக?

06. பயிர்ச் செய்கையில் பாதிப்பை ஏற்ப்கடுத்தும் காரணிகளைப் பெயரிடுக?

(07) 01. களைகள் மூலம் பயிர்ச்செய்கைக்கு ஏற்ப்படும் சேதங்கள் இரண்டைக் குறிப்பிடுக?

02. உருவவியல் அடிப்டையில் களைகளைப் பாகுபடுத்தும் இரண்டு பிரதான கூட்டங்களைப் பெயரிடுக?

03. மரக்கறி நாற்றுமேடைகளில் ஏற்படும் அடியழுகல் நோயின்

a. நோயறிகுறிகள்

b. நோயக்கிகள்

c. நோய்க்கட்பாட்டு முறைகள் இரண்டு ஆகியவற்றைக் குறிப்பிடுக?

04. பூச்சிகளின் உருமாற்ற முறைகள் இரண்டைக் குறிப்பிடுக?

05. பயிர்களில் பூச்சித் தாக்கத்தைக் கட்டுபடுத்தப் பயன்படுத்தக் கூடிய சூழல் நேயமான இரண்டு உபாயங்களைக் குறிப்பிடுக?